


மலர் 1 | 28-7-63 | இதழ் 37

# காந்தியார் வளர்த்த காங்கிரசில் நீதிக்குப் பஞ்சமா?

''சுதந்திரம் கிடைத்தால் லஞ்சம் வாங்குவோரைத் தூக்கிலே போடுவோம்'—இது வெள்ளைக்காரன் இந்தியத் துணைக் கண்டத்தில் காலூன்றிக் கொண்டிருந்த நேரத்தில் காங்கிரஸ்காரர்கள் பேசிய வீராவேசப் பேச்சு.

சுதந்திரம் கிடைத்துப் பதினறு ஆண்டுகள் ஆகின்றன. காங்கிரஸ் ஆட்சியில் இதுவரை லஞ்சம் வாங்கியோரைக் கணக்கெடுத்து தூக்கிலே போடுவதென்றால் திறமை மிக்கவர்களையும் பல ஆற்றலார்களையும் நாம் இழந்துவிட்டிருப்போம். அவர்களைத் தூக்கிலே போடவேண்டாம்! அந்த மனிதர்கள் மீது நடவடிக்கையாவது எடுக்கக்கூடாதா?

''ஏன்-நடவடிக்கை எடுக்கவில்லையா? லஞ்சம் வாங்கியதற்காக எத்தனையா அதிகாரிகளை வேலையிலிருந்தே நீக்கியிருக்கிறோம்'' என்று காங்கிரஸ்காரர்கள் கொக்கரிக்க வேண்டாம்.

அதிகாரிகளை விட்டுத் தள்ளுங்கள்! மந்திரி என்று பட்டயம் குத்திக்கொண்டிருப்போர்மீது இந்தியத் துணைக் கண்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

நிதியமைச்சராக இருந்த சி. டி. தேஷ்முக் பதவிவிலகியதும் இதைச் சொன்னார். ''அரசாங்க மேல் மட்டத்தில் லஞ்ச ஊழல் நாற்றமெடுக்கிறது. இதை வளரவிட்டால் காங்கிரஸ் அரசாங்கத்தின்மீது மக்களுக்கு இருக்கின்ற நல்லெண்ணம் குறைந்துவிடும். ஆகையால் பண்டித நேரு அவர்களே அந்த லஞ்சப் பேய்கள் மீது உடனடியாக நடவடிக்கை'' எடுங்கள்''—என்று எச்சரிக்கை செய்தார்.

தேஷ்முக்கின் எச்சரிக்கையை பண்டிதர் அலட்சியப்படுத்தினர். காங்கிரஸ் கட்சிக்குள்ளிருக்கும் சின்னஞ்சிறு குறைபாடுகளை இப்படியெல்லாம் வெளிப்படையாகப் பேசக் கூடாது என்று கண்டனம் தெரிவித்தார்.

காலஞ்சென்ற ஜனதிபதி ராஜேந்திரபிரசாத் அவர்கள் தேஷ்முக்கின் கோரிக்கையைக் கவனித்து குற்றவாளி யாரானலும் அவர்கள்மீது தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்கும்படி பண்டித நேருவைப் பலமுறை வற்புறுத்தியிருக்கிருர்.

இதன் காரணமாகவே ராஜேந்திர பிரசாத்திற்கும்-பண்டித நேருவுக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் எழுந்திருக்கின்றன.

அன்றையிலிருந்து இன்றைக்கு வரை மாநிலத்துக்கு மாநிலம் லஞ்ச ஊழல் நாற்றமெடுத்து சந்தி சிரிக்கிறதென்றால் அது வளர்ந்து கொழுப்பதற்குப் பெரும்பாலும் காரணமாய் இருந்தவர் பண்டித நேருதான் என்றால்—அது தவறான குற்றச்சாட்டு என்று தள்ளிவிட முடியாது.

கல்கத்தாவிலுள்ள சிராஜுதின் கம்பெனியாரிடம் ரூபாய் பத்தாயிரம் லஞ்சம் பெற்றதாகக் குற்றம்சாட்டப்பட்டு மந்திரி மாளவியா தானாக ராஜினமா செய்திருக்கிருர்.

வங்காளத்தில், ஒரிசாவில், பீகாரில், உத்திரப்பிரதேசத்தில் லஞ்சப் புகார்கள் சல்லாத் துணி போட்டு மறைக்கப்பட்டு உள்ளூர நாற்றமெடுத்துக்கொண்டிருக்கின்றன.

கேரளத்தில் நடைபெற்ற லஞ்ச ஊழல் விவகாரம் ஒதுக்கித் தள்ளிவிடக்கூடிய ஒன்றல்ல.

கேரள முதன் மந்திரிமீதும்—தொழில் மந்திரிமீதும் லஞ்சக் குற்றத்தைச் சுமத்தியவர்கள்—எதிர்க் கட்சிக்காரர்களோ—பத்திரிகைக்காரர்களோ—பொது மக்களோ அல்லர்! கேரள காங்கிரஸ் தலைவரே குற்றம்சாட்டியிருக்கிருர்.

கேரள முதன் மந்திரிமீதும்—தொழில் மந்திரிமீதும் விசாரணை நடத்தவேண்டுமென்று கேரள காங்கிரஸ் தலைவர் டெல்லிக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

கேரள மந்திரிகள்மீது சாட்டப்பட்ட லஞ்சப் புகார்கள் ஆதாரமற்றவை என்று—கேரள காங்கிரஸ் தலைவரின் வேண்டுகோளை பண்டித நேரு நிராகரித்துவிட்டார்.

டெல்லியிலே நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும் கேரள பிரச்சினை பற்றிப் பேசப்பட்டது. அப்போதும் விசாரணை தேவையில்லை என்று நேரு கூறிவிட்டார்.

காங்கிரஸ் கட்சியின் பார்லிமெண்டரி போர்டுக்கு கேரள விவகாரத்தை அனுப்பத் தேவையில்லை என்றும் நேரு கூறிவிட்டார்.

கேரள காங்கிரஸ் தலைவரும்—கேரள மந்திரிகளும் ஊழல் பிரச்சினையை நேருவின் தீர்ப்புக்கு விட்டிருந்தனர். அவரது தீர்ப்பை ஒப்புக்கொள்ள இருதரப்பினரும் தயாராக இருந்தனர்.

## நீதி வழங்க நேரு தயங்கியது ஏன்?

கேரள மந்திரிகள்மீது சாட்டப்பட்ட லஞ்சக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று நேரு எப்படிக் கூறமுடியும்.

கேரள அமைச்சரவையில் லஞ்சப் புகார் கூறப்பட்ட விதத்தை நேரு அறியமாட்டாரா?

அந்த லஞ்சக் குற்றச்சாட்டுச் செய்தியை கேரளப் பத்திரிகைகள் வெளியிட்டதும், அந்தப் பத்திரிகைகள்மீது கேரள சர்க்கார் வழக்குத் தொடர்ந்து பின் அவர்களே அந்த வழக்கை உடனடியாக வாபஸ் வாங்கிக்கொண்ட மானக்கேடான செய்தி-மனிதருள் மாணிக்கத்திற்குத் தெரியாதா?

கேரளத்தில் துணைத் தேர்தல் நடைபெற்றபோது—லஞ்சப் பிரச்சினையை எதிர்க்கட்சிகள் மேடை தோறும் எடுத்து விளம்பினவே! அது ஆதாரமற்ற செய்திதானு?

ஆதாரமற்ற செய்திதான் என்றால்—மேடை தோறும் பச்சைப்பொய் பரப்பிய எதிர்க் கட்சிகள்மீதும்—லஞ்சப் புகாரை விசாரணை செய்யவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்த கேரள காங்கிரஸ் தலைவர் மீதும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

லஞ்சம் வாங்கியதாகக் கூறப்படுவோர்மீதும் நடவடிக்கை இல்லை—அது பொய்யென்றால்—அதைச் சுமத்தியோர்மீதும் நடவடிக்கை இல்லை.

இதுதான் பாரதத்தின் நீதியோ? பண்டிதரின் தர்மமோ? அண்ணல் காந்தி ஆளாக்கிவிட்ட கட்சியின் அறமோ?

நாடு எதிர்பார்க்கிறது இந்தக் கேள்விக்கு நல்லதோர் பதிலை!

''காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் ஒருவர்மீது ஒருவர் குற்றம், குறை கூறுவதில் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். பொறுப்பற்ற முறையில் குற்றங்களைச் சுமத்தக் கூடாது. குற்றம், குறைகளைச் சுட்டிக் காட்டுவதாக இருந்தாலும் கட்சி மட்டத்தில் செய்யவேண்டும். அவசரப்பட்டு பத்திரிகைகளில் அறிக்கை வெளியிடக்கூடாது. மொத்தத்தில் கட்சிக்கு இழுக்கு ஏற்படும் விதத்தில் நடந்துகொள்ளக் கூடாது'' என்றெல்லாம் தேஷ்முக் காலத்தில் பாடிய அதே பல்லவியை இப்பொழுதும் பாடியிருக்கிருர் பண்டித நேரு.

குற்றச்சாட்டுக்களையும் குறைபாடுகளையும் கட்சி மட்டத்திலேயே விசாரித்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனல் கேரளப் பிரச்சினையை ஏன் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் விசாரிக்க நேரு மறுத்தார்? அதைக் காங்கிரஸ் கட்சியின் பார்லிமெண்டரி போர்டுக்கு அனுப்புவதை ஏன் எதிர்த்தார்? ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று ஏன் ஆணவத்தோடு பதில் சொன்னர்?

பண்டித நேருவுக்குப் பிறகு சரியான நீதி சொல்லுவதற்கு ஆளில்லை! அவர்தான் இந்தியத் துணைக் கண்டத்தின் கடைசி ஜனநாயகவாதி என்று தி. மு. கழகம் அடிக்கடி குறிப்பிட்டு வருகிறது.

ஆனல் பண்டிதர் காலத்திலே அந்த நீதி கிடைக்கவில்லை! லஞ்சம் வாங்குவோர் தட்டிக் கொடுக்கப்பட்டார்கள்—ஊழல் வளர்ந்தது—கோணல் சட்டங்கள் பெருகின—மொழி வெறியர்கள் ஆதிக்கம் செலுத்தினர்கள் என்ற அவப்பெயரை பண்டிதர் பெறக் கூடாது என்று நாம் விரும்புகிறோம்.

நிர்வாகத்தில்—திறமையில்—தியாகத்தில் பலருக்கு வழிகாட்டியாக இருக்கும் பண்டிதர் நீதி வழங்குவதிலும்—எதிர்காலத்தில் ஆட்சி பீடத்திற்கு வர இருப்போருக்கு நல்ல வழிகாட்டியாக இருப்பார் என்று தி. மு. கழகம் எதிர்பார்க்கிறது.

—தினகரன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

"இப்படி வாக்குமூலம் கொடுத்தால் வீடு கட்ட 30 ரூபாயும், துணி வாங்க 10 ரூபாயும், தர முடியாது. தற்செயலாக எரிந்தது. எனக் கூறினால்தான் மேற்படி ரூபாயும் தர முடியும்" என தாசில்தார் கூறியதாகத் தெரிகிறது.

ஆனால், பாதிக்கப்பட்டவர்களோ, "இது தற்செயல் நிகழ்ச்சி அல்ல, கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டு நடத்திய சதி தான், இதில் எங்களுக்கு சந்தேகமில்லை" என உறுதியாகத் தெரிவித்துவிட்டனர். தாசில்தார் அதை அப்படியே குறித்துக் கொண்டார்.

இதற்கிடையே நிவாரண வேலைகளையும் நாங்கள் கவனித்தோம். ஆவூர் தி. மு. க. உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் 40 படி அரிசியும் 360 ரூபாயும் வசூலிக்கப்பட்டது. திரு. ப. உ. சண்முகம் எம். எல். ஏ. அவர்களின் சகோதரர் திரு. தியாகராஜன் 80 படி அரிசி கொடுத்து அனுப்பினர். அனைத்தும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டது. மேலும் வேட்டவலம், செங்கம் திருவண்ணாமலை ஆகிய ஊர்களில் நிவாரண வசூல் நடந்து கொண்டிருக்கிறது. எரிந்து போன வீடுகளைக் கட்டிக் கொடுப்பது என்ற திட்டத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

மேற்படி கொள்ளிவைப்புச் சம்பவம் பற்றி பிரதமர் நேரு, காயிதெ மில்லத் ஆகியோருக்கும், தி. மு. க. தலைமை நிலையத்திற்கும் தந்திகள் கொடுக்கப்பட்டுள்ளன!

கம்யூனிஸ்டுகளின் இந்தக் காலிச் செயலால் அப்பகுதியிலே பீதி நிலவுகிறது!

✻

டாக்டர் சம்சுத்தீனின் தகவல்களைப் படித்தவர்கள் வேதனைப் படாமலும் வெட்கப்படாமலும் இருக்கமுடியாது. ஆனால் இது கண்டு வெட்கப்பட வேண்டியவர்களும், தலைகுனிய வேண்டியவர்களும் காங்கிரஸ்காரர்கள்தான்!

நாடு விடுதலை அடைந்து 16 ஆண்டுகளுக்குப் பிறகு மூன்று பொதுத் தேர்தல்களை நடத்தி விட்டோம் என உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய பிறகு, தாம் விரும்பியவர்களுக்கு ஓட்டளித்த இந்நாட்டு வாக்காள மக்கள் வீடுகளையும், சொத்துக்களையும் இழந்து வீதியில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால் இதைவிட ஜனநாயகத்திற்கு கேவலம் அவமானம் என்ன இருக்க முடியும்?

"அரசினரே, இந்த அவமானத்தைக் கழுவ, களைய, இனிமேல் நிகழாதிருக்க உடனேயே உஷார் நடவடிக்கை எடுங்கள்" என்பதுதான் நமது தற்போதைய வேண்டுகோள்!

●

# எம். ஜி. ஆர். சினிமா நடிகர் அல்ல-- அவர் மக்களின் பிரதிநிதி!

திருவண்ணாமலை காமராசரது தேர்தல் சூழ்ச்சிக்கு கடைசி கட்டம். காமராசருக்கு இனி இறங்கு முகமே தவிர ஏறு முக மல்ல.

கோட்டையின் கதாநாயகர்களாக — பாதுகாவலர்களாக இனி தி. மு. கழகம் தான் இருக்கப்போகிறது. இவ்வளவு போட்டியிலேயும் தி. மு. கழகம் திருவண்ணாமலையில் வெற்றி பெற்ற பிறகு, இளம் குதிரைகளைப் போல கழகத் தோழர்கள் ஓடி ஓடி பணி புரிந்து பெற்ற வெற்றிக்குப் பிறகு, தோல்வியின் மானத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமே தவிர சினிமாக் காரர்களை கொண்டு போய் வெற்றி பெற்றார்கள் என்று கூறுவது மடத்தனமாகும்.

யார் சினிமா நடிகர்கள்? எம். ஜி. இராமச்சந்திரன் ஒரு எம். எல். சி, எஸ். எஸ். இரா

## கோமாளிகளே உணருவீர் கோணல் பேச்சைக் கைவிடுவீர்!

சேந்திரன் ஒரு எம். எல் ஏ அவர்கள் சினிமா நடிகர்களாக இருப்பது தவறா? அவர்கள் உம்மிடத்திலே இல்லை என்ற பொறாமையா?

1475 ஓட்டுகளைப் பெற்ற வெற்றி ஒரு வெற்றியா? கேட்கலாமா? சரி. அதே 1475 ஓட்டுகளை நீங்கள் பெற்று தி. மு. க. தோற்றிருந்தால், எங்கே அண்ணாத்துரை? என்று கேட்க மாட்டாயா தி. மு. க. தோற்றதைப் பார்த்தீர்களா? சொல்லியிருக்கமாட்டீர்களா?

தி. மு. க. கொடிகள் எத்தனை கிழிக்கப்பட்டன? எத்தனை தோழர்கள் தாக்கப்பட்டார்கள்? ஆபாசம் அளவுக்கு மீறி ஆரவாரமிடவில்லையா? ஒரு மைப்பாடு ஓங்காரக் கூச்சல் போடவில்லையா? இது மிகச் சாதாரண வெற்றியா?

திருவண்ணாமலை வெற்றி சாதாரண வெற்றிஎன்றால்அது தமிழ் நாட்டோடு நின்று விடுவதானால். டில்லியிலே உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள்



திருவண்ணாமலை வெற்றியை பாராட்டி எனக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். எனவே தோல்வியை ஒப்புக் கொள்வது விவேகம்—அறிவுடைமை அதை விடுத்து கேலி பேசுவது அறிவீனம்.

இந்த சர்க்கார் உமக்கு மட்டும் தான் உரிமையானதா? கார் உள்ளளவும் காமராசா நீர் தான் மந்திரிஎன்று எழுதிக் கொடுத்துள்ளார்கள மக்கள். எந்தக் கட்சியும் ஆட்சிக் கட்சியாகவரலாம்!

கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக் கட்சியாக வரவில்லையா? முட்டாள் தனத்தால் ஆட்சியைக் கோட்டை விட்டார்களே தவிர ஜனநாயகம் அவர்களுக்கு வாய்ப்பளிக்கவில்லையா?

திருவண்ணாமலையிலேதி.மு.க பெற்ற வெற்றி சாதாரண வெற்றியா? இனி எங்கே இடைத் தேர்தல் நடந்தாலும் நாம் தான் அங்கே வெற்றி மாலையை சூடுவோம். பெற்ற வெற்றியை நாம் ஏற்று மகிழ்வோம். ●

### அடுத்த இதழில்!..

"பிரிவினையை வலியுறுத்தும் சினிமா நடிகர்களை மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும்" — என்று கோயில் மந்திரி மக்கன் பேசியுள்ளார்.

அவர் பேச்சைப்பற்றி ஊர் மக்கள் பேசிக்கொண்ட கருத்தை பிடாரன் விவரித்து எழுதுகிறார்—

**பகிஷ்கரிப்பும்-பரிகசிப்பும்**

படிக்கத் தவறாதீர்கள்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ந்துவிட்டேன். துறவு நிலைக்கு என்னைப் பக்குவப் படுத்திக்கொண்டு வருகிறேன்! மன்னித்து என்னையும் உங்கள் பாதைக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்று மீனாளின் பாதங்களைப்பிடித்துக்கொண்டு கெஞ்சினான் மெய்யழகன்.

'எழுந்திருங்கள்! என் பாதைக்கு அழைத்துச் செல்லுகிறேன்! துறவியாக அல்ல— துணைவராக, காதலராக!"— மீனாள் சிரிப்பொலிக்கிடையே பதில் சொன்னாள்.

மெய்யழகன் இடியோசை கேட்டவனைப்போல்திடுக்கிட்டு எழுந்தான். அவள் ஆடை நெகிழ நிற்கின்ற கோலமும்—பார்க்கிற பார்வையும்—பேசுகிற பேச்சும் பூஜைக்குரிய மலரிலிருந்து பூநாகம் தீண்டுவது போலிருந்தது.

மீனாள் அவன் அருகே நெருங்கி தன் முந்தானையை எடுத்து அவன் கண்ணீரைத் துடைத்து "வழி காட்டியவர் துறவியாகப் போகக் கூடாது. வாழ்க்கைத் துணைவராக வர வேண்டும்"—என்று மெய்யழகனின் இரு கரங்களையும் எடுத்து தன் கன்னத்தோடு இணைத்துக்கொண்டாள்.

"அம்மா! தவறு செய்கிறீர்கள்! பாவக்குழியிலே விழுந்து விடாதீர்கள்! எரிந்துகொண்டிருக்கும் ஞானவிளக்கை பாதியிலே அணைத்துவிடாதீர்கள்"- என்று அவள் பிடியை உதறித் தள்ளிவிட்டு விலகி நின்றான்!

"கொடிகூட படருவதற்குக் கொம்பைத் தேடி ஓடுகிறது. இந்த மீனாள் படருவதற்கு மெய்யழகனை நாடுவது தவறா? இயற்கையைக் கட்டுப்படுத்தி-மனதை அடக்கி—வாழ்க்கையைப் பாலைவனமாக்கிக் கொண்டு கன்னியாக—துறவியாக வாழ்வதில் என்ன பெருமை இருக்கிறது? அன்பும்-அறமும்நிறைந்த இல்வாழ்க்கை பண்பும்—பயனும் உடையது என்பது வள்ளுவர் வாசகமல்லவா! துறவு எண்ணத்தைக் கைவிடுங்கள்! துணையாக-இணையாக வாழ்வதற்குப் புறப்படுங்கள்!"—என்று புதிய தத்துவத்தை இனிய குரலில் பொழிந்து முடித்தாள் மீனாள்.

வேப்ப மரத்தில் பலாப்பழம் பழுத்ததுபோல் இருந்தது மேரி மீனாளின் பேச்சு. மெய்யழகன் அவளை ஆச்சரியத்தோடு உற்று நோக்கினான்.

"மீனாள்! காவி கட்டிய துறவியைவிட கட்டுப்பாடாக வாழ்ந்த உன்னை இந்தப் புதிய பாதைக்கு அழைத்து வந்தது யார்?" அவளை மார்போடு இறுகத் தழுவியவாறு கேட்டான் மெய்யழகன்.


"யார் அழைத்து வருவார்கள்! ஆசை இருக்காதா? அவளும் ஒரு பெண்ணல்லவோ"—என்று மெய்யழகனின் இதயமே அவனுக்குப் பதில் சொல்லிற்று!

# ஆலூருக்குத் தீ வைத்த அக்கிரமக்காரர்களே

## ஆட்சியூரில் பற்றுதோ அந்த நெருப்பு?

## சாவூருக்கு அனுப்பாதீர் ஜனநாயகத்தை

## காவலூரார் ஆதரவோ கம்யூனிஸ்டுகளுக்கு?



**திருவண்ணாமலைத் தொகுதியில் தி. மு. கழகத்திற்கு வாக்களித்த ஆலூர் முஸ்லிம் தோழர்களின் வீடுகளுக்கு கம்யூனிஸ்டுகள் நெருப்பு வைத்துவிட்டனர். அந்தக் கோரக் காட்சியை நேரில் பார்த்து தகவல் சேகரித்து வந்த-டாக்டர் சம்சுதீன் எழுதிய உருக்கமான கட்டுரை இது.**

ஜனநாயகம் நிலவுவதாகச் சொல்லப்படும் எந்த நாட்டிலுமே நடக்கும் தேர்தலில் தாம் விரும்பும் எந்த வேட்பாளரையும், அரசியல்கட்சியையும் ஆதரிப்பதற்கு ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையுண்டு.

அரசியல்வேறுபாட்டின் காரணமாகவோ தோல்வியின் காரணமாகவோ, வெறிகொண்டு, மாற்றார் மீது தீச் செயலில் இறங்குவோர் எவராக இருந்தாலும் அவர்கள் ஜனநாயக நாட்டிலே வாழும் தகுதியை இழந்துவிட்ட கொடியவர்கள் என்றுதான் கூறமுடியும்.

திருவண்ணாமலைதொகுதியில் நடந்த இடைத் தேர்தலுக்குப் பிறகு, ஆலூர் என்றகிராமத்தில் ஏழை முஸ்லிம்களின் குடிசைகளுக்குத் தீயிடப்பட்டிருக்கிறது என்ற செய்தியைப் படிக்கும் எவருமே, இதுதேர்தலின் விளைவாக மூண்ட தீயாக இருக்கும் என்றுதான் எண்ணுவார்கள், உண்மையும் அதுதான்!

திருவண்ணாமலை தேர்தலில் காங்கிரசுக்கும் தி.மு.க. வுக்கும் நேரடிப் போட்டி நடந்தது. தி.மு.க. வென்றது; காங்கிரஸ் தோற்றது!

எனவே தி. மு. க.வின் வெற்றிக்குத் துணைநின்ற முஸ்லிம்களை, தோல்வியிலே துவண்டிருக்கும் காங்கிரசார், தொல்லைப்படுத்துகிறார்கள் என்றால், அதை நாம் புரிந்துகொள்ளமுடியும்; தற்காலிகமாக மன்னிக்கவும் முடியும்.

ஆனால், இந்தத்தீயிடும்திருத்தொண்டைச் செய்தவர்கள்கம்யூனிஸ்ட்டுகள் என்று சொல்லப் படுவதை அறியும்போது, 'தற்கொலை' முயற்சியிலே கம்யூனிஸ்டுகள் இவ்வளவு அவசரப் படுகிறார்களே என்றுதான் அனுதாபப்படுகிறோம்.

உண்மையில் அவர்கள் வைத்த தீ, ஏழை இஸ்லாமியரின் இல்லங்களுக்கல்ல; தங்களுடைய அரசியல் கட்சிக்கே அவர்கள் தீ வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் கூறமுடியும்!

ஏற்கனவே, தேய்ந்து, கட்டெறும்பாகி, தமிழ்நாட்டுஅரசியலிலிருந்து தூக்கி யெறியப்பட்ட நிலையில், காங்கிரசின் பாதத்தடியில் ஒட்டிக்கொண்டு மீண்டும் தலைதூக்கலாமா என்ற பரிதாப நிலையிலே இருக்கும் காம்ரேடுகளின் இந்தச் செய்கைக்கு அவர்கள் என்ன விளக்கம் தர முடியும்?

தீயிடப்பட்ட இத்தீச் செயலைப் பற்றி இன்றளவும் காங்கிரஸ் அமைச்சர்களோ, தலைவர்களோ ஒரு வார்த்தைகூடக் கண்டனக் குரல் எழுப்பாத காரணத்தால், தங்கள் மௌனத்தின் மூலம் இதனை அவர்களும் ஆதரிக்கிறார்கள் என்றே நாம் கருத வேண்டியிருக்கிறது.

காங்கிரசுக்கு ஓட்டுவேட்டையாடுவதற்காக, தேர்தல்காலத்தில் ஆலூருக்குச் சென்று முகாமடிந்திருந்த அந்த காங்கிரஸ் முஸ்லிம் 'கன'வான்கள் இது பற்றி என்னசொல்லுகிறார்கள்? அடுத்த தேர்தல் வரை வாய் மூடி மௌனியாகத்தான் இருக்கப் போகிறார்களா?

ஏழை இஸ்லாமியரின் வீடுகளுக்கு இடப்பட்ட தீயைப் பற்றி 'ஏனோதானோ'வென்று இருப்பவர்கள், இதே, தீ எதிர் காலத்தில் அவர்களைச் சுற்றியும் எழாது என்பதற்கு இந்த நாட்டிலே இருக்கும் பாதுகாப்பு என்னஎன்பதையாவது சிந்தித்தார்களா?

தீயிட்ட தீயவர்களில் ஒருவராவது இதுவரை கைது செய்யப்படவில்லை என்றால், அது நம் நாட்டு காவல்துறையினருக்குக் கண்ணியமளிக்கக்கூடிய செய்கையாக இருக்க முடியுமா?

இந்தத் தீயிடும் சம்பவத்திற்கு முன்னர், தீப்பொறி பறக்கப்பேசி, வெளிப்படையாகவே அச்சுறுத்திய அந்த அரசியல் பேச்சாளர்கள் அரசாங்கத்தின் குறிப்பேட்டில் இல்லாமல் போய்விட்டார்களா? அப்படியானால் அதன் உண்மைஎன்ன என்பதை இந்த நாடு அறியத் துடிக்கிறது!

நாட்டின் தந்தையெனப் போற்றப்படும் காந்திஜீ கொல்லப்பட்ட மறுநாள், முஸ்லிம்கள் பலரை, ஒரு ஹிந்து செய்த பாவத்திற்காக பலிகொடுத்தனர். அன்று முஸ்லிம்களை உயிருடன் கொளுத்த பெட்ரோல் வழங்கியவர்கள் பிரமுகர்களாகவும், முஸ்லிம்களின் சொத்துக்களைச் சூறையாடிய கொள்ளைக்காரர்கள் அடுத்துள்ள ஊர்களிலே செல்வந்தர்களாகவும் வாழ்கிறார்கள் என இன்றளவு வெளிப்படையாகவே சொல்லப்பட்டு வரும் நிலையில் முஸ்லிம் வீடுகளுக்குத் தீயிட்டவர்கள் 'சுகமாக' இருக்கிறார்கள் என்ற செய்தி தமிழ் நாட்டில் உலவுவது நாட்டின் நல்ல சூழ்நிலையை வளர்க்க உதவுமா என்பதைசம்பந்தப்பட்டவர்கள் எண்ணிப் பார்க்கட்டும்!

"இந்தஅக்கிரமத்தை நாங்கள் சகிக்க முடியாது; இஸ்லாமியச் சகோதரர்களுக்கு இழைக்கப்படும்எந்தக்கொடுமையையும்நாங்கள் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது."

என்று திருவண்ணாமலை வெற்றி வீரர், திரு- ப. உ. சண்முகம் ஆரணியில் நடந்த பொதுக் கூட்டத்தில் முழக்கமிட்டார். "பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பது என் தலையாய பணி" என்று சூளுரைத்தார். அவர் உள்ளத்தைப் பாராட்டுகிறோம். அந்த நல்ல பண்பாடு தமிழ் நாடெங்கும் வளரட்டும்என்று வாழ்த்துகிறோம்.

ஆலூரில் எழுந்த தீ அணைந்துவிட்டது; அது வேறூரிலே பரவாமல் தடுக்க வேண்டாமா? அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை இந்த நாடு கூர்மையாகக் கவனித்து வருகிறது!

(6-ம் பக்கம் பார்க்க)

## இது உண்மைதானா?

'ஜனசக்தி' உதவி ஆசிரியர் பதவியிலிருந்து கே. பாலதண்டாயுதம் தூக்கியெறிப்பட்டார் என்று பேசிக்கொள்ளப்படுகிறதே அது உண்மைதானா?

அதற்குக் காரணம் என்ன?

அகில இந்திய ரீதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைப்படி—வரிவிதிப்பிலிருந்து காங்கிரஸ் கட்சியின் பல கொள்கைகளைக் கண்டித்தும்—நேருவின்மீதே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர இருக்கும் இந்த நேரத்தில்—காங்கிரஸ் கட்சிக்கு வால்பிடிப்பது போல் பத்திரிகையில் எழுதி வந்ததாலும்—

மக்களின் பிரதான எதிர்ப்பை காங்கிரஸ் கட்சியின் பக்கம் திருப்பிவிடுவதற்குப் பதிலாக காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்குத் தாளம் போடுவதுபோல் செயல்பட்டதாலும்—

தி. மு. கழகத்தை பிற்போக்கு அணியில் தள்ளி—காங்கிரசை முற்போக்கு அணியில் சேர்த்துக் காட்டியதாலும்—

சமீபத்தில் புதிதாக வெளிவந்துள்ள 'தீக்கதிர்' என்ற கம்யூனிஸ்ட் கட்சி சார்புள்ள பத்திரிகையைத் தாக்கி தாறுமாறாக எழுதியதாலும்—

கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளிருக்கும் முற்போக்கு அணிகள் திரண்டெழுந்து பாலதண்டாயுதத்தின்மீது எதிர்ப்புத் தெரிவித்தார்களாம்.

அந்த எதிர்ப்பு—பத்திரிகை வரை சென்று நிலைமை மோசமாகிவிட்டதாம்.

நிலைமையைச் சமாளிக்க மேற்கண்ட காரணங்களை வைத்து பாலதண்டாயுதத்திற்கு உதவி ஆசிரியர் பதவியிலிருந்து கல்தா கொடுக்கப்பட்டுவிட்டதாக பிராட்வே தெருவில் சிலர் பேசிக்கொள்ளுகிறார்களே! அது உண்மைதானா?

# வீட்டைக் கொளுத்தினர்! வெறியாட்டம் போட்டனர்!

# ப. உ. ச. தொகுதியில் பயங்கர நிலைமை! பழிவாங்கும் கொடுமை

# காங்கிரசார் ஆதரித்தனர்! கம்யூனிஸ்டுகள் தீ வைத்தனர்

# சதிகாரர் செயலுக்கு சர்க்காரும் உடந்தையா?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலூரில் தீப்பிடித்த செய்தி மறுநாள் காலையிலேயே எனக்குக் கிடைத்தது. உடனே நானும், திருவண்ணாமலை நகர முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் எஸ். பி. அப்துல் ஜப்பார் அவர்களும் ஆலூருக்குவிரைந்து சென்றோம்.

எங்களைக் கண்டதும் எரிந்த வீடுகளின் முன்னே பரிதாப நிலையில் நின்றுகொண்டிருந்த மக்கள் கோவென கட்டிப் பிடித்துக் கதறினர். அவர்களுக்கு ஆறுதல் மொழிகள் கூறிவிட்டு, அங்கு நடைபெற்ற சம்பவங்களின் விபரங்களை வரிசையாகக் கேட்டறிந்தேன். கிடைத்த தகவல்களிலிருந்து, தீப்பிடித்த சம்பவம் தற்செயலாக நடைபெற்ற நிகழ்ச்சி அல்ல; திட்டமிட்டு நடத்தப்பட்ட சதிதான் என்பது தெளிவானது. அதுவும், இந்த பாதகத்தைப் புரிந்தவர்கள் காம்ரேடுகள்தான் என்பதும் தெரிந்தது.

28-6-63 அன்று, ஆலூருக்கு அருகிலுள்ள வீரபாண்டியைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் சிலர் காங்கிரஸ் அபேட்சகர் திரு பத்ராசலம் பிள்ளைக்கு ஆதரவு தேடி ஆலூர் வந்தனர். வந்தவர்கள், ஜும்ஆத் தொழுகைக்காக பள்ளிவாசலை நோக்கிச் சென்று கொண்டிருந்த முஸ்லிம்களைப் பார்த்து, "இம்முறை ப. உ. சண்முகம் வெற்றி பெறுவதற்கு ஆலூர் முஸ்லிம்களின் ஓட்டு ஆதரவாக விழுமேயானால் இந்தக் கிராமத்தையே தீ வைத்துக் கொளுத்துவோம்" என மிரட்டினராம்!

இச் சம்பவத்திற்குப் பின், தேர்தல் முடிந்து முடிவும் வெளியாகியது. சண்முகம் வெற்றி பெற்றார் முடிவு அறிவிக்கப்பட்ட பிறகு வீரபாண்டிச் சந்தைக்கு பாய் விற்பனைக்குச் சென்ற முஸ்லிம்களை கம்யூனிஸ்டுத் தோழர்கள் கடுமையான பாஷையில் ஏசிப் பேசினாராம். அதோடு நில்லாமல், விற்பனைக்காக கொண்டு வந்திருந்த அவர்களின் பாய்களையும், அவர்களின் மடிகளிலிருந்த பணத்தையும் தட்டிப்பறித்து, அடித்து விரட்டினராம்.

அதற்குப்பின் சில தினங்கள் கழித்து தாள்கத்தை ஏற்றுவதற்காகச் சென்ற மூன்று முஸ்லிம்களுக்கும் பாய் விற்கச் சென்றவர்களுக்கு, நேர்ந்த அனுபவமே ஏற்பட்டது. அவர்களுக்கும் திட்டும், ஏச்சும் கிடைத்தனவாம். அதோடு

இன்னும் நாலைந்து தினங்களில் ஆலூர் கிராமத்தையே தீ வைத்துக் கொளுத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். இந்தச் செய்தியை உங்கள் பெரிய மனிதர்களிடமும் போய்ச்சொல்லுங்களடா" என்று பகிரங்கமாகவே கூறினராம்!

இந்த சம்பவத்திற்குப் பின்தான் கொள்ளி வைப்பு வேலை நடைபெற்றிருக்கிறது!

10-7-63 அன்று நள்ளிரவு ஒரு மணி அளவில் காம்ரேடுகள் மூவர் ஆலூர் வந்து முஸ்லிம்களின் குடிசைக் கூரைகள் மீது ஒருவித வெடி மருந்துத் தூளைத் தூவி கீழ்புறத்தில் தீ வைத்துவிட்டு வெளியேறினர். ஊர்த் தெருவைத் தாண்டும் வரை வேக நடைபோட்டுள்ளனர். அப்பொழுது அவர்களைப் பார்த்து நாயொன்று குரைத்திருக்கிறது. காலிகளில் ஒருவன் கத்தியை எடுத்து அந்த நாயை குத்தியிருக்கிறான்!

நாயின் குரல்கேட்டு எழுந்தவர்கள் யாரென்று கேட்பதற்குள் ஓட்டமெடுத்து விட்டனர் காலிகள். இதற்குள் வீடுகள் பற்றி எரியவே அனைவர் கவனமும் தீயை அணைப்பதில் திரும்பியது. காலிகளைத் தொடரும் முயற்சியைக் கைவிட்டு விட்டு தீயை அணைக்கத் தொடங்கினர்.

சிலர் திருவண்ணாமலை நோக்கி விரைந்தனர். தீயணைக்கும் படையினரைக் கண்டு விபரத்தைக் கூறினர். ஆனால் அவர்களோ பொறுத்தமற்ற காரணங்களைக் கூறிப் புறப்பட மறுத்துவிட்டனர்!

ஏமாற்றமடைந்த அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. இரா. தர்மலிங்கம் அவர்கள் வீடு சென்று தகவல் கொடுத்தனர். திரு. தர்மலிங்கம் அவர்களின் துணைவியார் உடனேயே தீயணைக்கும் படையினருக்கு போன் செய்தார். அப்போதும் அவர்கள் தட்டிக் கழிக்கவே, அம்மையார், "உடனே புறப்படுகிறீர்களா, அல்லது சென்னைக்குப் போன் செய்யவா?" எனக் கேட்டிருக்கிறார். திகிலடைந்த தீயணைக்கும் படை அப்புறம்தான் கிளம்பியது!

## அண்ணா சிறை வைக்கப்பட்டால் என்ன செய்வீர்கள்?



இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் காரணமாக வைத்து இந்த சர்க்கார் அண்ணா அவர்களை நீண்ட நாள் சிறை வைத்துவிட்டால், அருமைத் தோழர்களே நீங்கள் என்ன செய்வீர்கள். உங்கள் கருத்தை கட்டுரையாகவோ— கவிதை வடிவிலோ எழுதி அனுப்புங்கள்.

கிளம்பிய தீயணைக்கும் படை சாவகாசமாக விடியற்காலம் நாலரை மணிக்கு ஆலூர் வந்து சேர்ந்தது! தீயணைக்கும் படையை அனுப்பிவிட்டு, திருவண்ணாமலை முழுவதும் சுற்றி, முக்கியமானவர்களுக்கு செய்திகள் கொடுத்துவிட்டு சைக்கிளில் ஆலூர் திரும்பியவர்கள் அப்போதுதான் தீயணைக்கும் என்ஜினும் வருவதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். இதிலிருந்து தீயணைக்கும் மோட்டார், சைக்கிளுக்கும் குறைவான வேகத்தில், எவ்வளவு மெதுவாக வந்திருக்கிறது என்பதைக் கற்பனைசெய்து பார்த்துக் கொள்ளுங்கள்!

மறுநாள், ஆலூர் கிராம முன்சீப் கொடுத்த தகவல் கண்டு மாலை 6 மணிக்கு வேட்டவலம் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து ஹெட்கான்ஸ்டேபிள்கள் இருவர் வந்தனர். வந்த அவர்கள், பாதிக்கப்பட்ட மக்களையும் என்னையுமே திருப்பித் திருப்பி பொருத்தமற்ற கேள்விகளைக் கேட்டுத் துளைத்தனர். அவர்களின் அலட்சியப் போக்கு வெந்த புண்ணில் வேலை செருகுவது போலிருந்தது.

ரெவினியூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், டெப்டி தாசில்தார் ஆகியோரும் வந்து எரிந்த இடங்களைப் பார்வையிட்டனர். இழந்த சொத்துக்களின் மதிப்புக்களை அவரவர் வாய்மொழியாகவே கேட்டுக் கொண்டனர். சுமார் பதினையாயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமாயின என்பதை ஸ்தலத்தை நேரில் பார்வையிடுபவர்கள் தெரிந்து கொள்ளலாம். தீப்பற்றி எரிந்த காரணம் பற்றி கேட்டபோது "கம்யூனிஸ்டுகளின் நாசவேலையால்தான் தீப்பிடித்தது" என வாக்குமூலம் கொடுத்தனர், பாதிக்கப்பட்டவர்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

# துடிக்கட்டும் - துடிக்கட்டும் - இள நெஞ்சங்கள்

# வெடிக்கட்டும் - வெடிக்கட்டும் - வீரர் புரட்சி

# தூள் தூளாகி முடியட்டும் - முடியட்டும் பகையின் வாழ்வு

## மிரட்டுகிற சாஸ்திரியார் மிரண்டு ஓட - போராடு களத்தினிலே பகையைச் சாடு

வரிப் புலியே! எழு!

எரிமலையே! கிளம்பு!

தமிழ் மகனே! புறப்படு!

புறப்படு! புறப்படு! போருக்குப் புறப்படு!

அகப்படும் பகையை-வாலை ஆட்டிடும் எதிர்ப்பை-கைவசப்படும் வடக்கை - அறைகூவிடும் இந்தியை அடித்து நொறுக்கிட இடித்துச் சிதைத்திட எழுந்திடு! எழுந்திடு இன்றே எழுந்திடு!

கோட்டான் மொழியைத் தென்னுட்டான் படிக்கவேண்டும்! படித்தால்தான்பதவியாம் பவிசாம்; பாரதத்தில் வாழ்வாம்!

பண்டிதர் கொற்றம் திமிருடன் நெஞ்சத்துணிவுடன் இன்னும் சொல்கிறது!

"இட்ட ஆணையைத் திரும்பப் பெறேும்! எதிர்த்து நிற்போரை மிதித்தழிப்போம்!" என்கின்றனர்.

"வேண்டாம் வீண் முயற்சி; சிதடன் வேங்கையை இடறிய கதை தெரியாதா?" என்றேம்; கேட்கவில்லை. அவர்கட்கு பாடம்புகட்டதோழனே! எழுந்திடு! தொண்டனே! எழுந்திடு!

○

"இட்டதுதான் சட்டம்! எப்படித்தான் மாற்ற முடியும்?" என்கின்றனர் சாஸ்திரியும், நேருவும்.

"இருக்கின்ற துணிக்கேற்ற அளவு உடலை வெட்டிக்கொள். தைத்தசெருப்புக்கேற்பக் காலை நறுக்கிக் கொள்!" இப்படி எவனும் சொன்னல் அவனை மடையன் என்போம். அவன்பேச்சை முட்டாள் தனம் என்று ஒதுக்குவோம். பொறுப்புள்ள தில்லி அமைச்சர்களோ இன்னும் சொல்லி வருகிறுர்கள் 'இட்ட சட்டம் அப்படித்தானே இருக்கிறது. அதற்கேற்பத்தானே நீங்கள் நடந்துகொள்ள வேண்டும்" என்று.

உடலுக்காகத்தான் ஆடை; காலுக்காகத்தான் செருப்பு; மக்களுக்காகத்தான் சட்டம்! இதற்குஎதிர்ப்பதம் பேசுவோர் எவராயினும் அதை எதிர்ப்போம்!

லால்பகதூராரோ சட்டத்தை மாற்ற முடியாது என்கிறுர். அவர் முட்டாளில்லை. ஆணவமும் எதேச்சதிகாரமும்தான் அவரை இந்த ஆட்டம் போடவைக்கின்றன.

மண்ணேடு மண்ணுகி மக்கிச் சிதைந்து போன சட்டங்கள் அவருக்குத் தெரியும். அவர் கண்ணெதிரிலேயே இந்திய அரசியல் சட்டம் 16 முறை திருத்தவும் பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள்மீது அடக்குமுறை தொடுக்க எத்தனையோ சட்டங்களை அவர் திருத்தியுள்ளார்.

காலகாலமாகக் சுரண்டிக் கொழுத்த சமீன்தார்களுக்கு இழப்பு ஈடுதரக் கூட அரசியல் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. கேவலமான இந்தக் காரியத்திற்கே திருததப்பட்டுள்ளது என்றுல், ஒரு சரிபாதிப் பகுதியினரின் மொழி உணர்ச்சிகளை மதிக்க ஏன் அரசியல் சட்டத்தைத் திருத்தக் கூடாது?

ஆங்கிலம் துணைக் கண்ட மக்களுக்கு அன்னிய மொழி என்றுல், இந்தியும் தென்னக மக்களுக்கு அன்னிய மொழி யில்லையா? அடிப்படையான இந்த நியாயமும் சிதைக்கப்படுகிற தென்றுல், அதை எதிர்த்துப் போராடக் கூடாதாம்! சட்டத்திற்கு விரோதமானதாம், இந்தி எதிர்ப்புப் போராட்டம்! கடும் நடவடிக்கையும் எடுப்பாராம்!

அன்னிய மொழி ஆங்கிலம் என்பதால் அதை ஏற்கக் கூடாது என்போரே! அன்னியன் வகுத்த 'மெட்ரிக்' 'லிட்டர்' முறைகளை சதக் கணக்குகளையும் ஏற்றுக் கொண்டபோது எங்கேபோயிற்று உங்கள் மானம்? அன்னிய நாட்டான் வகுத்த ஆட்சி முறையை அப்படியேவைத்துக் கொண்டிருக்கையில் எங்கே போயிற்று உங்கள் மானம்?

○

சட்டம் போட்டு என்ன செய்ய? உங்கள் சட்டம்என்ன எதற்கும் வளையாததா? 'கத்துக் குட்டிகளின் கிறுக்கல்கள்' என்று உங்களது சட்டம் எத்துணை யெத்துணை நீதி மன்றத்தால் தூக்கி எறியப்பட்டிருக்கின்றது. பாதுகாப்புச் சட்டமே குறைபாடுடையதுஎன்று ஆமதாபாத் உயர்நீதிமன்றம் எட்டி மிதித்துத் தூக்கி எறியவில்லையா? இந்தியத் தலைமை நீதிமன்றமும் அதைத் தூக்கி எறியப்போகிறது; காணத்தான் இருகின்றன உம் விழிகளும்!

அந்தச் சட்டத்தை வைத்துத்தான் எம்மையும் வதைக்கலாம் என்பது உம் ஆசைக் கனவு. பலிக்காது. உம் கனவு நிலைக்காது அந்த ஆகாயக் கோட்டை! சட்ட விற்பன்னர்கள் துணை நாடுங்கள், வேறு கொடுவாள் தயாரிக்க!

○

இந்தி வருவதால் சம வாய்ப்புக் கெடாது என்ற போதனை பெரும் போதனையாய் இருக்கிறது; கெடாதா? இப்போதே பிறமொழிகள் அனைத்தையும் பலியிட்டு உங்கள் இந்தியின் வயிற்றில் கொட்டுகிறீர்கள். பிறமொழிகளுக்கு என்று சில செப்புக் காசுகள் மட்டுமே போடும் நீங்கள் காதறுந்த ஊசியாம் கடையழிந்த இந்திக்கு பலகோடி கொட்டுகிறீர்கள். அதன் வயிற்றை வீங்க வைக்க அடாத முயற்சிகளை விடாது செய்கிறீர்கள். நாங்களும் 'ஆமாம் சாமி'களாகிவிட்டால் அஞ்சாது பகலிலேயே கொள்ளை யடிப்பீர்களே!

எனவேதான்உங்கள்கூற்றை நம்ப மறுக்கிறேம். 'நில்' என்று கூறிக் கடல் அலைகளுக்கு நீங்கள் இடும் ஆணையை ஏற்க மறுக்கிறேம்! அதன் உருவான வடிவமே இந்தி எதிர்ப்புப் போராட்டம்! மதச்சார்ப்பற்ற அரசு என்று கூறிக்கொண்டே இந்து சமயத்தை மட்டும் வளர்க்கும் கயவர்கள் தில்லிமைனர்கள் என்பது எங்கட்குத் தெரியும். அதைப்போல் எல்லோருக்கும் சம வாய்ப்புஎன்று சொல்லிக்கொண்டே வடவரை மட்டும் வாழவைப்பீர்என்பதும் எங்கட்குப் புரியும்.

எனவேதான்...


தி.மு.கழகம் முரசம் தட்டிவிட்டது; பாசறை அமைத்துவிட்டது; 'களத்திற்கு வாருங்கள்' என்று அழைப்பும் கொடுத்துவிட்டது.

இச்சகம் பேசி ஏமாற்றிடலாம் என்றெண்ணும் பகைக்குப் பிடரியல் அடிகொடுக்க, வடக்கின் முதுகுக்கு மண்கட்ட இளைஞர்களே எழுங்கள்!

ஆகஸ்ட் நான்காம் நாள் சேலத்தில் ஒரு பாடி வீடமைகிறது. தமிழகச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் நாவலர் தலைமைஏற்கிறுர். தில்லியில் நம் பாராளுமன்றக் குழுவுக்கு தலைவராக இருக்கும் கி. மனேகரன்

(12-ம் பக்கம் பார்க்க)

### காமராஜருக்கு எச்சரிக்கை!



**காட்டிக் கொடுப்போரை கூட்டி அலையாதீர்!**

**கம்யூனிஸ்டு முதலைகளை நம்பாதீர்!**

**சொல்லுவது நாமல்ல!**

"கம்யூனிஸத்தைப் பரப்ப, கம்யூனிஸ்ட் நாடுகள் இதர நாடுகளை ஆக்கிரமிக்க வேண்டுமா? ஆக்கிரமிக்கலாமா? என்பதுதான் கம்யூனிஸ்ட் அகிலத்திலுள்ள சண்டை. இவ்விஷயத்தில், அதாவது ஆக்கிரமிப்புக் கொள்கை விஷயத்தில் ரஷியா காட்டும் மனப்பான்மையை இந்தியா வரவேற்கிறது. இதைப்பயன்படுத்தி இந்தியக் கம்யூனிஸ்டுகள் தம் கம்யூனிஸ்ட் பிரச்சாரத்திற்கு ஆதரவு தேட முயல்வார்கள். இதுபற்றி நாம் ஜாக்கிரதையாக இருப்பது அவசியம். "சீனக் கொள்கை"க்கும் கம்யூனிசத்தில் இடம் உண்டு என்பதை நாம் மறந்துவிடலாகாது.

கம்யூனிசம் பற்றிய "கிழக்கு-மேற்கு"ப் பூசல் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்குள்ளேயும் இருக்கிறது. இதில் சீனக் கட்சியை ஆதரிப்பவர்கள் சீன ஆக்கிரமிப்பை ஆதரிப்பதாகவே அர்த்தம். இப்படிப்பட்ட ஒரு சீன ஆதரவு கோஷ்டி வங்காளத்தில் இருந்து வருகிறது. ஆக்கிரமிப்பு நடந்து ஒரு வருஷமாகியும் அந்தப் பிரதேசத்தில் இந்தக் கோஷ்டியின் செல்வாககும்-பிரச்சாரமும் குறைந்ததாகத் தெரியவில்லை. இதுபற்றி இந்திய சர்க்கார் போதிய ஜாக்கிரதையுடன் இருக்கிறதா என்பதே இந்தியர்கள் இப்போது கவனிக்க வேண்டிய பிரச்சினை. இதுபற்றி சர்க்கார் கண்காணிப்பை சிறிது தீவிரப்படுத்துவது இப்போது மிகவும் அவசியம்!

—தினமணி,
23-7-63 தலையங்கம்.

# காட்டிக் கொடுத்திடும் துரோகிகள் அல்லர்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் ஒரு பகுதியை அதிகார ஆதிக்கத்துடன் பற்றும் அபாயத்தையும் அநீதியையும் ஒழித்துக் கட்டவே ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்; அவரவர்களின் தாய்மொழி மீது விசுவாசமும் பற்றும் இல்லாததால் அல்ல.

இந்தி ஆட்சிமொழியாவதை எதிர்ப்பவர்கள் தேசியத் தன்மான உணர்ச்சியற்றவர்கள் என்னும் பொருந்தாக் குற்றச்சாட்டிற்குப் பதிலாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியாவின் தேசியமொழிகள் அனைத்தையும் ஆட்சிமொழிகளாக அறிவிக்கும் திட்டத்தை வகுத்தது. திரு. சாஸ்திரியார் இதை எளிதில்கையாளமுடியாதென்று கருதுகிறார்.

இந்தியை நாங்களே ஆட்சிமொழியாக்குவது கொடுங்கோன்மையென்றும்; ஆகையினால் அதன் விளைவுகள் எதுவாக இருந்தாலும் பொருட்படுத்தாமல் அதுதடுத்து நிறுத்தப்படவேண்டியதென்றும் கருதுகிறோம்.

திரு. சாஸ்திரிக்கு ஒன்று நினைவுபடுத்த விரும்புகிறேன்.

லோக் சபையின் பெண் உறுப்பினர் ஒருவர் எழுந்து, உறுதிமொழிகள் எவ்வளவு தான் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், தனதுகணவர் இந்தித் தேர்வில் தேர்ச்சி பெறவில்லையென்ற ஒரே காரணத்திற்காக அவருக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லை என்று திரு. சாஸ்திரியாருக்கு கூறினாரே!

அன்று நீண்ட பதிலளித்துப் பேசிய திரு. சாஸ்திரி அந்த அம்மையாரின் பேச்சை மட்டும் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டாரே தவிரகுற்றச்சாட்டுக்குப் பதில் அளிப்பதினின்றும் நழுவி விட்டார் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தியை ஆட்சிமொழியாக ஆக்கிவிட்டால், இந்தி பேசாத பகுதி மக்கள் என்றும் நிரந்தரமான பாதகத்துக்குள்ளாவார்கள். இந்த அநீதி, எந்த வகையிலும் சரிகட்டப்பட முடியாதது; ஈடு செய்ய முடியாதது.

எனவே, இந்தி பேசாத பகுதிக்குப் பாதகம் விளையாது என்று தரப்படுகிறஎந்தஉறுதிமொழியும் நிறைவேற்றப்பட முடியாத—நீடித்து நிலைக்காத ஒன்றாகும்.

எவ்வளவு தரகக் கூடியதெனினும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து ஆட்சிமொழியாக வைப்பதும், அத்துடன் பதினான்கு மொழிகளையும் ஆட்சிமொழிகளாக ஆக்குவதற்கான திட்டத்தைத் தீட்டி எவ்வளவு இடர்பாடுகள் நேரிடினும் அதை நிறைவேற்றுவதற்குச் செயல்படுவதும்தான் தற்போதைய சூழ்நிலையில் நியாயமாகக் கருதப்படும் கொள்கையாகும்.

"இந்தி பேசாத பகுதி மக்களின் பிரச்சினைகள் அனுதாபத்தோடுகவனிக்க படவேண்டும். தற்போது காட்டப்பட்டுள்ள சலுகைகள் போதுமானதாக இல்லை என்ற கருத்து சென்னையில் நிலவுகிறது"—என்று சஞ்சீவிரெட்டி எடுத்துச் சொல்லி முறையிட்டும் திரு. சாஸ்திரி இந்தி ஆதிக்கக் கொள்கையைக் கைவிடத் தயாராக இல்லை.

மேல் மட்டத்தில் உள்ளவர்கள், எவ்வித அனுதாபத்தையும் காட்டத் தயாராக இல்லை என்பதோடு, இந்திபற்றி அவர்கள் கடைப்பிடித்துவரும் முரட்டுப் பிடிவாதப் போக்கைத் தொடர்ந்து விடாப் பிடியாகப் பின்பற்ற அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை திரு. லால்பகதூர் அவரது பேச்சில் வெளிக்காட்டியிருக்கிறார்.


விவேகமற்ற கொள்கையை முரட்டுப் பிடிவாதத்துடன் பின்பற்றி வருகிறவர்களின் உள்ளங்களைத் தொடும் முயற்சியே தி. மு. க. வின போராட்டமாகும்.

இன்னலேற்பதின் மூலமும், தியாகம் செய்வதன் மூலமும் ஓநாய்மனப்பான்மை கொண்ட ஆளுங் கட்சியின் இரத்தப்பசியைத் தீர்க்கப் போதிய இரத்தத்தை இரையாக வழங்கும் சோதனைத் தன்மையிலேயே போராட்டம் அமையும்.

இந்தக்காந்தீய முறை, மிரட்டலுக்குப் பணியாது; ஆசை வலையிலும் சிக்காது.

எத்தகைய இன்னலையும் தாங்கும் சக்தி தி. மு. கழகத்திற்கு உண்டு என்பதிலே எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு; ஏனெனில் கொடுங்கோன்மையோடும், அநீதியோடும் சமரசம் சாத்தியமல்ல என்பதிலே தி.மு.கழகம் நம்பிக்கை வைத்திருக்கிறது.

---



**கல்லெறிப் போராட்டமா?**

**கட்டணக் குறைப்புப் போராட்டமா?**

**கம்யூனிஸ்டுகளே! பதில் சொல்லுங்கள்!**

கேரளாவில் பஸ் கட்டண உயர்வை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் நடத்தி வரும் போராட்டத்தில் சில மாணவர்கள் கலந்து கொண்டனர். கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் பள்ளி பள்ளியாக ஊர்வலம் போய் வந்தனர். போர்டு ஹைஸ்கூல் அருகில் சில மாணவர்கள் போலீசார் மீது கல்லெறிந்தனர். சில இடங்களில் போய்க்கொண்டிருந்த பஸ்கள்மீதும் கல்லெறியப்பட்டதாம். மொத்தம் ஒன்பது பஸ்களுக்குச் சேதமேற்பட்டது. அவற்றின் டிரைவர்களும்-பிரயாணிகளும் துரத்தியடிக்கப்பட்டனர்.

—தினமணி, 23-7-63.

ஆயுள் கைதிகளே! கம்யூனிஸ்ட் தோழர்களே! சென்ற ஆண்டு தி. மு. கழகம் விலைவாசி மறியல் போராட்டம் நடத்தியதல்லவா? அதைப் பயன்படுத்திக் கொண்டு சில காலிகள் அரசாங்க பஸ்களுக்குச் சேதம் விளைவித்தார்கள் அல்லவா? அப்பொழுது கம்யூனிஸ்டுகளே நீங்கள் என்ன சொன்னீர்கள்? கல்லெறிந்தவர் கழகத்தவர்தான் என்று ஊர்கூட்டி ஒப்பாரி வைத்தீர்களே! கல்லெறி வீரர்கள் என்று எங்களுக்குப் பட்டம் கொடுத்தீர்களே! இப்பொழுது கேரளாவில் நடந்திருக்கும் கல்லெறிக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? கட்டணத்தைக் குறைக்கத்தானே கேரளாவில் கம்யூனிஸ்டுகள் போராட்டம் நடத்துகின்றனர்? பின் கல்லால் அடிப்பானேன்? பஸ்களைச் சேதப்படுத்துவானேன்? பிரயாணிகளையும்-டிரைவரையும் துரத்தியடிப்பானேன்? இளம் பெண்களிடம் காலித்தனமாய் நடந்துகொள்ளுவானேன்? போராட்டம் நடத்துவோர் இப்படிக் காலித்தனத்தில் ஈடுபடலாமா? இல்லை—கேரளாவில் உள்ள கம்யூனிஸ்டுகள் அத்தனைபேரும் காலிகள்தானா?

சொல்லுங்கள்! தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளே! படிதாண்டாப் பத்தினிகளே! பாலதண்டாயுதங்களே! இதற்கு உங்கள் பதிலென்ன?

---

# நாட்டைக் காத்திடும் வீரர்கள் நாங்கள்!